



# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"






Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 323 | 16.05.2026 | SATURDAY | VAIKASI : 2 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 323 | 16.05.2026 | சனிக்கிழமை | வைகாசி : 2 | விலை : ரூ.5/-


## அடுத்த ஆண்டு முதல்

# "கணினி வழியில் நீட் தேர்வு!"

## மத்திய அரசு

புதுடெல்லி: மே.16-

அடுத்த ஆண்டு முதல் மருத்துவப் படிப்புகளுக்கான NEET நுழைவுத் தேர்வு OMR முறைக்குப் பதிலாக கணினி வழித் தேர்வாக (CBT முறையில்) நடத்தப்படும் என்று மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

மருத்துவப் படிப்புக்கான ழிணிணிஜி நுழைவுத் தேர்வு வினாத்தாள் கசிந்ததாக வெளியான தகவலை அடுத்து கடந்த 3ம் தேதி நடத்தப்பட்ட அத்தேர்வு ரத்து செய்யப்பட்டது. இதற்கான அறிவிப்பை தேசிய தேர்வு முகமை (NTA) அறிவித்தது. இதையடுத்து, மறு தேர்வு ஜூன் 21ல் நடத்தப்படும் என்றும் தேசிய தேர்வு முகமை நேற்று (வெள்ளிக்கிழமை) அறிவித்துள்ளது.

இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக டெல்லியில் செய்தியளர்களிடம் பேசிய மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான், "NEET-UG தேர்வுக்கான புதிய தேதியை NTA அறிவித்துள்ளது. இந்த மறுதேர்வு ஜூன் 21ம் தேதி நடைபெறும். மாணவர்களும் அவர்களின் எதிர்காலமுமே எங்களின் மிக உயர்ந்த முன்னுரிமையாகும். மாணவர்களின் கடின உழைப்பு மற்றும் முயற்சிகளின் மீது அரசாங்கம் எப்போதும் மிகுந்த அக்கறையுடனும் உணர்வுப்பூர்வமாகவும் இருந்து வருகிறது.

நீட் தேர்வு மே 3ம் தேதி நடத்தப்பட்டது. மே 7ம் தேதிக்குள் 'ஊகத் தாள்கள்' (guess papers) என்று கூறப்படுபவற்றில் இடம்பெற்றிருந்த சில கேள்விகள், இந்த ஆண்டின் கேள்வித்தாளிலும் இடம்பெற்றிருந்ததாக NTA-வின் குறைதீர்க்கும் அமைப்பு வாயிலாகப் புகார்கள் பெறப்பட்டன. உடனடியாக இது குறித்து ஆலோசனைகள் நடத்தப்பட்டன. NTA மற்றும் அரசாங்கம் ஆகியவை உயர்கல்வித்துறையுடன்



இணைந்து ஒரு முதற்கட்ட விசாரணையைத் தொடங்கின. பின்னர் இந்த விவகாரம் இந்திய அரசாங்கத்தின் தொடர்புடைய விசாரணை முகமைகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

மேலோட்டமாகப் பார்க்கையில் இவ்விவகாரம் இரண்டு அல்லது மூன்று மாநிலங்களுடன் தொடர்புடையதாகத் தோன்றியது. எனவே, அந்தந்த மாநிலங்களின் விசாரணை முகமைகளுடன் ஒருங்கிணைப்பு ஏற்படுத்தப்பட்டது. இந்த விசாரணை செயல்முறை மே 7 அன்று இரவு முதல் முழுவீச்சில் தொடங்கியது. மே 8 முதல் தொடர்ந்து நடைபெற்றது. நான்கு நாட்களுக்குள், 'ஊகத் தாள்கள்' என்ற போர்வையில் கேள்விகள் கசிந்துள்ளன என்பது குறித்த தெளிவு எங்களுக்குக் கிடைத்ததும், அது உறுதியானதும், மாணவர்களின் நலன் கருதி மே 12 அன்று நாங்கள் உரிய நடவடிக்கையை மேற்கொண்டோம்.

கல்வித்துறையில் செயல்படும் மாஃபியா கும்பல்களின் சதியினாலோ அல்லது தகுதியற்ற ஒரு நபர் முறையற்ற வழிகள் மூலம் பயனடைவதாலோ தகுதியுள்ள எந்தவொரு மாணவரும் தங்கள் உரிமைகளை இழந்துவிடக்கூடாது என்பதில் நாங்கள் உறுதியாக இருந்தோம். தற்போது மறு தேர்வு தேதி அறிவிக்கப்பட்டுள்ளது. முறைகேடுகள் விஷயத்தில் பூஜ்ஜிய சகிப்புத்தன்மை கடைப்பிடிக்கப்படும். தேர்வு மாஃபியாக்கள் மற்றும் சமூக விரோத சக்திகளுக்கு எதிரான ஒரு நீண்ட போராட்டமாக இது அமையும். இந்த தொழில்நுட்ப காலத்தில் புதிய சவால்கள் உருவாகி வருகின்றன. பல்வேறு சமூக ஊடகக் கணக்குகள் மூலம் தவறான தகவல்கள் பரப்பப்பட்டு குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மறுதேர்வு நடைமுறையை சீர்குலைப்பதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன.

இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு அரசு உடனடியாக இந்த விவகாரத்தை மத்திய புலனாய்வுத் துறை (சிபிஐ) வசம் ப்படைத்தது. சிபிஐ மீதும் அதனுடன் இணைந்து பணியாற்றும் பிற முகமைகள் மீதும் எனக்கு முழு நம்பிக்கை உள்ளது. அரசும், அனைத்துத் துறைகளும் உயர்மட்டத் தலைமையும் இந்த விவகாரத்தை மிகவும் தீவிரமாக அணுகி வருகின்றன. அவர்கள் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு நிலைமையை மிக உன்னிப்பாக கண்காணித்து வருகின்றனர். அச்சத்தையும் குழப்பத்தையும் ஏற்படுத்துவோருக்கு உங்கள் வாயிலாக நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். வரவிருக்கும் தேர்வு நடைமுறையில் இருந்து அவர்கள் விலகி இருக்க வேண்டும். இல்லையெனில் அவர்கள் கடுமையான தண்டனையை எதிர்கொள்ள நேரிடும்.

சமூகத்திடம் குறிப்பாக அனைத்து மாணவர்களிடமும் நான் ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். எவ்வித அச்சமும் இன்றி நீங்கள் தேர்வு எழுத வர வேண்டும். அரசு எப்போதும் உங்களுக்கு பக்கபலமாக துணை நிற்கும். தகுதிவாய்ந்த மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. எந்தவொரு மாஃபியா சதித்திட்டமோ அல்லது பண பலமோ உங்கள் கல்விக்கான இடத்தை அபகரித்துச் செல்வதை நாங்கள் ஒருபோதும் விரும்பவில்லை என்பதை மீண்டும் வலியுத்திக் கூற விரும்புகிறேன். அதனால்தான் நாங்கள் இத்தகைய ஒரு கடுமையான முடிவை எடுக்க வேண்டியதாயிற்று. மாணவர்களின் நம்பிக்கைதான் எங்களுக்கு மிக மிக முக்கியம்.

சிபிஐ மிகச்சரியாகவே கூறியுள்ளது. இதில் சம்பந்தப்பட்ட எவரும் தப்ப முடியாது. அவர் ழிஜிகி அமைப்புக்குள் இருப்பவராக இருந்தாலும் சரி அல்லது அதற்கு வெளியே இருப்பவராக இருந்தாலும் சரி குற்றத்தில் ஈடுபட்ட எவரும் தண்டனையில் இருந்து தப்ப முடியாது. கணினி வழித் தேர்வு ஒப்பீட்டளவில் ளிவிஸி முறையை விட சிறந்தது. இணையக் குற்றங்கள் என்பவை இன்று ஒரு மிகப்பெரிய தனி உலகமாகவே உருவெடுத்துள்ளன. இதில் சவால்கள் இருந்தாலும் நாம் நமது நாட்டின் அமைப்பின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். நான் குறிப்பிட விரும்பிய ஒரு முக்கியமான விஷயம் என்னவென்றால், அடுத்த ஆண்டில் இருந்து இப்பிரச்சினையின் மூல காரணமே களையப்படும். NEET தேர்வு, OMR முறையைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, கணினி வழித் தேர்வாக (CBT) நடத்தப்படும்" என தெரிவித்தார்.






## தமிழக அரசு அலுவலகங்களில் முதல்வர் விஜய் புகைப்படம் கட்டாயம்!

### வெளியான உத்தரவு

சென்னை: மே.16-

அரசு அலுவலகங்கள், அரசுத்துறை சார்ந்த கட்டிடங்கள் அனைத்திலும் முதல்வர் விஜய் புகைப்படத்தை வைப்பது கட்டாயம் என தமிழ்நாடு அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

இது குறித்து தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி துறை அதிகாரப்பூர்வமாக வெளியிட்டிருக்கும் அறிக்கையில், "முதல்வர் விஜய்யின் அங்கீகரிக்கப்பட்ட புகைப்படம் அனைத்து அரசு அலுவலகங்கள், தமிழ்நாடு அரசின் பொதுத்துறை நிறுவனங்கள், தமிழ்நாடு அரசின் தன்னாட்சி அமைப்புகள், ஏனைய அரசு கட்டடங்களில் உரிய முறையில் காட்சிப்படுத்த வேண்டும்" இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு அலுவலகங்களில் எந்த மாதிரியான புகைப்படத்தைப் பயன்படுத்த வேண்டும் என்பதை தெளிவுபடுத்துவதற்காக, முதல்வரின் 'அங்கீகரிக்கப்பட்ட அதிகாரப்பூர்வ புகைப்படம்' தற்போது செய்தித்துறையால வெளியிடப்பட்டுள்ளது. இந்தப் புகைப்படம் அனைத்துத் துறைகளுக்கும் உரிய முறையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மே மாதத்திற்கான மகளிர் உரிமைத்தொகை ரூ.1,000 வரவு வைப்பு; தவெக அரசு நடவடிக்கை

சென்னை, மே.16-

கடந்த 2021ம் ஆண்டு நடந்த சட்டசபை தேர்தலில் வெற்றிபெற்ற திமுக மகளிருக்கு மாதந்தோறும் தலா ரூ.1,000 உரிமைத்தொகை வழங்கப்படும் என தேர்தல் வாக்குறுதி அளித்தது. அதன்படி, ஆட்சிக்கு வந்த 2 ஆண்டுகளுக்குப்பின் 2023ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15ம் தேதி முதல் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தை அரசு அமல்படுத்தியது. அதன்படி, 1 கோடியே 31 லட்சம் பெண்கள் பயனாளிகளாக கண்டறியப்பட்டு மாதம் தோறும் 15ம் தேதி அவர்களில் வங்கி கணக்குகளில் தலா ரூ.1,000 உரிமைத்தொகை வரவு வைக்கப்பட்டு வருகிறது.





இந்நிலையில், சமீபத்தில் நடந்த சட்டசபை தேர்தலில் விஜய் தலைமையிலான தவெக வெற்றிபெற்று ஆட்சியை கைப்பற்றியது. புதிய அரசு ஆட்சியமைத்துள்ள நிலையில் வழக்கம்போல் பயனாளர்களுக்கு மே மாதத்திற்கான மகளிர் உரிமைத்தொகை ரூ.1,000 வரவு வைக்கப்பட்டுள்ளது. அதன்படி, 1 கோடியே 31 லட்சம் பெண் பயனாளர்களுக்கு மகளிர் உரிமைத்தொகை ரூ.1,000 இன்று காலை வரவு வைக்கப்பட்டுள்ளது.

மகளிர் உரிமைத்தொகை வரவு வைக்கப்படும் என்று முதல்அமைச்சர் விஜய் நேற்று கூறியிருந்த நிலையில் மே மாதத்திற்கான உரிமைத்தொகை இன்று வரவு வைக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, அரசு பள்ளிகளில் பயின்று உயர் கல்வி தொடரும் மாணவிகளுக்கான புதுமை பெண் திட்டம் மற்றும் மாணவர்களுக்கான தமிழ் புதல்வன் திட்டத்தின் கீழ் தலா ரூ.1,000 உதவித்தொகை மாணவமாணவியரின் வங்கி கணக்கில் தவெக அரசால் நேற்று வரவு வைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.


விளம்பரம் மற்றும் செய்திகள்

தொடர்புக்கு : 88705 00000


## "முகத்தை மூடிக்கொண்டு வந்த நபர் யாரென்று தெளிவுபடுத்துக"

சென்னை: மே.16-

முகத்தை மூடிக்கொண்டு தனது வீட்டுக்கு வந்தவர் யார்? என்பதை முதல்வர் விஜய் மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழக அரசில் எந்தவித குதிரை பேர அரசியலும் இல்லை என்பதை முதல்வர் விஜய் தெளிவுபடுத்த வேண்டும்.

மதச்சார்பற்ற வெற்றி கூட்டணியைச் சேர்ந்தவர்கள் எவ்வாறு நிபந்தனை இல்லாத ஆதரவு' என்று வெளிப்படையாக தெரிவித்தார்களோ, அதேபோல் அதிமுகவில் இருந்து பிரிந்து வந்தவர்களும் தங்களின் ஆதரவை எந்த நிபந்தனையும் இல்லாமல் வெளிப்படையாக அறிவிக்க



வேண்டும். அப்போது தான் குதிரை பேரம் நடைபெறவில்லை என்பதை மக்கள் நம்புவார்கள்.

மேலும், 'முகத்தை மூடிக்கொண்டு வந்தவர் யார்?' என்பதையும் மக்களுக்கு தெரியப்படுத்துவதோடு, அதற்கு பின்பு எந்தவிதமான குதிரை பேரமும் நடக்கவில்லை என்பதையும் மக்களுக்கு வெளிப்படையாக தெரிவிக்க வேண்டும் என்று தேமுதிக சார்பாக கேட்டுக்கொள்கிறேன்" இவ்வாறு அவர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக கடந்த 13ம் தேதி தமிழக அரசின் மீதான நம்பிக்கை வாக்கெடுப்பு நடைபெற்றது. அப்போது நம்பிக்கை தீர்மானத்தின் மீது பேசிய தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா எம்எல்ஏ, தவெக அரசு மூடநம்பிக்கையை ஊக்குவிக்கும் வகையில், முதல்வரின் ஜோதிடருக்கு அரசுப் பதவி வழங்கியுள்ளது. இதன் மூலம் அரசு இளைஞர்களுக்கு தவறான முன்னுதாரணத்தை வைக்கிறது என்றும் அந்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்றும் பேசியிருந்தார். அன்றைய தினமே ரிக்கி ராதன் பண்டிட் நியமனத்தை அரசு ரத்து செய்தது என்பது நினைவுகூரத்தக்கது.

இந்நிலையில், விஜய் பெரும்பான்மைக்காக அரசியல் கட்சிகளை நாடிக்கொண்டிருந்த போது அவரது வீட்டுக்கு முகத்தை மூடிக் கொண்டு வந்த நபர் யார் என்று பிரேமலதா வினவியுள்ளார்.

# ஈரான் உடனான போரின்போது இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அமீரகம் வந்தாரா?



துபாய்: மே.16-

ஈரானுடனான போரின் போது, இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஐக்கிய அரபு அமீரகத்தின் அதிபருடன் ரகசிய சந்திப்பை நடத்தினார் என்று அவரது அலுவலகம் தெரிவித்துள்ளது.'சிங்கத்தின் கர்ஜனை' நடவடிக்கையின்போது, பிரதமர் நெதன்யாகு அமீரகத்துக்கு ரகசிய பயணம் மேற்கொண்டார் என்றும் அங்கு அவர், அமீரக அதிபர் ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யானை சந்தித்தார் என்றும் அவரது அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஈரானுடனான போரின் போது, இஸ்ரேல் தனது அயர்ன் டோம் வான் பாதுகாப்பு அமைப்புகளையும் அவற்றை இயக்குவதற்கான பணியாளர்களையும் அமீரகத்துக்கு அனுப்பியதாக இஸ்ரேலுக்கான அமெரிக்க தூதர் மைக் ஹக்கபீ அறிவித்த ஒரு நாள் கழித்து, இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியது. ஹக்கபீயின் கருத்துகளை நேரடியாக உறுதிப்படுத்தாவிட்டாலும், இந்த பயணம் “இஸ்ரேலுக்கும் ஐக்கிய அரபு அமீரகத்துக்கும் இடையிலான உறவுகளில் ஒரு வரலாற்று திருப்புமுனையை குறிக்கிறது" என்று நெதன்யாகுவின் அலுவலகம் தெரிவித்துள்ளது. இந்நிலையில் ஈரானுடனான போரின் போது இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஐக்கிய அரபு அமீரகத்துக்கு வரவில்லை என்று அந்த நாடு மறுப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக யுஏஇ நாட்டின் செய்தி நிறுவனமான டபிள்யூஏஎம் இதுதொடர்பாக ஒரு கட்டுரையை வெளியிட்டுள்ளது. அந்த கட்டுரையில் வெளிவந்துள்ள தகவலின்படி இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு, யுஏஇக்கு வரவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

இஸ்ரேலுடனான உறவுகள் வெளிப்படையானவை என்றும் அவை வெளிப்படையற்ற அல்லது அதிகாரப் பூர்வமற்ற ஏற்பாடுகளின் அடிப்படையில் அமைந்தவை அல்ல என்றும் அந்த கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெட்ரோல், டீசல் விலை லிட்டருக்கு ரூ.3 அதிகரிப்பு

சென்னை::மே.16-

பெட்ரோல், டீசல் விலை லிட்டருக்கு ரூ.3 அளவில் உயர்த்தப்பட்டுள்ளது. அதன்படி, சென்னையில் பெட்ரோல் விலை லிட்டருக்கு ரூ.3.14 உயர்ந்துள்ளது. அதாவது, ரூ.100.80க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு லிட்டர் பெட்ரோல் இப்போது ரூ.103.98க்கு விற்பனை செய்யப்படுகிறது.

இதேபோல், டீசல் விலை லிட்டருக்கு ரூ.3.11 உயர்த்தப்பட்டுள்ளது. தற்போது டீசல் விலை ரூ.95.50 ஆக உள்ளது. அமெரிக்கா இஸ்ரேல் படைகள் மற்றும் ஈரான் இடையிலான போர் காரணமாக சர்வதேச அளவில் கச்சா



எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் கச்சா எண்ணெயின் விலை அதிகரித்துள்ளது. அதன் எதிரொலியாக பெட்ரோல் மற்றும் டீசல் விலை ஏற்கெனவே சில நாடுகளில் உயர்ந்துள்ளது. இந்தியாவில் சில தனியார் நிறுவனங்கள் பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தின. எல்பிஜி எரிவாயு சிலிண்டரின் விலையும் அதிகரித்துள்ளது. இந்த நிலையில்தான் பெட்ரோல், டீசல் விலையும் தற்போது அதிகரித்துள்ளது. சமீபத்தில் நாட்டு மக்களுக்கு பிரதமர் மோடி விடுத்த செய்தியில், “கரோனா பெருந்தொற்று காலத்தில் வீட்டில் இருந்து பணியாற்றுவது, ஆன்லைனில் ஆலோசனை கூட்டம் நடத்துவது போன்ற நடைமுறைக்கு நாம் பழகிக் கொண்டோம். தற்போது மீண்டும் அதை நாம் நம் தேசத்தின் நலன் கருதி பின்பற்ற வேண்டிய சூழல் உருவாகி உள்ளது. அது இன்றைய காலத்தின் கட்டாயமும் கூட. இதன் மூலம் எரிபொருள் பயன்பாட்டை குறைத்துக் கொள்ள முடியும். பெட்ரோல் மற்றும் டீசல் உள்ளிட்ட எரிபொருளின் விலை உலக அளவில் விலை உயர்ந்துள்ளது. இத்தகையச் சூழலில் பெட்ரோல் மற்றும் டீசல் வாங்குவதற்காக செலவிடப்படும் அந்நியச் செலாவணியை, பெட்ரோல் மற்றும் டீசலை சேமிப்பதன் மூலம் அதை மிச்சப்படுத்துவது நம் எல்லோரது பொறுப்பாகும். இதே நிலைதான் சமையல் எண்ணெய்க்கும் உள்ளது. அதன் பயன்பாட்டை நாம் குறைத்துக் கொள்ள வேண்டி உள்ளது. இது தேசபக்திக்கு சிறந்தவொரு பங்களிப்பாக இருக்கும்” என்று கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.தற்போது இந்த பெட்ரோல், டீசல் விலை உயர்வால் சரக்கு போக்குவரத்துச் செலவுகள் அதிகரித்து, பால், காய்கறிகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலையும் உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே நாட்டின் மொத்த விற்பனை பணவீக்கம் 8.3 சதவீதமாக உயர்ந்துள்ள நிலையில், இந்த விலை உயர்வு சாமானிய மக்களுக்குக் கூடுதல் சுமையை ஏற்படுத்தும் எனப் பொருளாதார வல்லுநர்கள் கவலை தெரிவிக்கின்றனர். மேலும், சிஎன்ஜி எரிவாயு விலையும் கிலோவுக்கு ரூ.2 உயர்த்தப்பட்டுள்ளதால் ஆட்டோ மற்றும் வாடகை கார் கட்டணங்களும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

# சபரிமலை ஐயப்பன் கோயில் வழக்கில் தீர்ப்பு ஒத்திவைப்பு

புதுடெல்லி::மே.16-

கேரள மாநிலத்தில் உள்ள சபரிமலையில் அனைத்து வயது பெண்களையும் வழிபட அனுமதித்த தீர்ப்புக்கு எதிரான மறு ஆய்வு மனுக்களை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த், நீதிபதிகள் பி.வி நாக ரத்தினா, எம் எம் சுந்தரேஷ், ஏ.அமானுல்லா, ஏ.ஜி. மசி, பி.பி. வர்லே, ஆர். மகாதேவன், ஜோய்மால்யா பக் ஷி ஆகியோரை கொண்ட 9 நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வு விசாரித்து வருகிறது.நேற்று நடைபெற்ற 16வது நாள் விசாரணையின்போது, மூத்த வழக்கறிஞர் கோபால் சுப்ரமணியம் ஆஜராகி, மதத்துக்கும், மதப்பிரிவுக்கும் இடையே



வேறுபாடு உள்ளது. மதம் சார்ந்த உரிமைகள் விவகாரத்தில் நீதிமன்றங்களின் தலையீடு ஒரு குறிப்பிட்ட அளவே இருக்க முடியும் என்று வாதிட்டார்.மற்றொரு மூத்த வழக்கறிஞர் ராகேஷ் துவிவேதி, இந்துத் துவம் வாழ்க்கை முறை என்பதைக் காட்டிலும் சமூக கட்டமைப்பைக் கொண்ட மத தத்துவங்களையும் கொண்டு, மனிதர்களுக்கும், சக்திக்கும் இடையிலான தொடர்பையும், இருப்பின் புரிதலையும், மனித வாழ்க்கையின் அர்த்தங்களையும் தருவதாக உள்ளது என்று வாதிட்டார்.

மூத்த வழக்கறிஞர் ராஜீவ் தவன், ஒரு மதத்தில் வழக்கங்களைத் தொடர செய்வதா என்பதற்கு அத்தியாவசிய நடைமுறை கோட்பாட்டைப் பொருத்தி ஆய்வு செய்ய முடியாது என்று வாதிட்டார். அனைத்து தரப்பு வாதங்களையும் பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், தீர்ப்பை மறு தேதி குறிப்பிடாமல் தள்ளி வைத்தனர்.



# தேர்தலுக்குப் பிந்தைய வன்முறை வழக்கில் கொல்கத்தா உயர் நீதிமன்றத்தில் மம்தா வாதம்

கொல்கத்தா::மே.16-

மேற்கு வங்க சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகள் கடந்த 4ம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன. இதில் பாஜக அமோக வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்துள்ளது. முதல்வராக சுவேந்து அதிகாரி பதவியேற்றுள்ளார்.

இந்நிலையில் தேர்தலுக்குப் பின்னர் மேற்கு வங்கத்தின் பல பகுதிகளில் வன்முறைச் சம்பவங்கள் நடந்தன. மேலும் திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் அலுவலகத்தின் மீது பாஜக தொண்டர்கள் தாக்குதல் நடத்தி தீவைத்தனர் என்றும் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக திரிணமூல் காங்கிரஸ் சார்பில் வழக்கறிஞர் ஷிர்சன்யா பண்டோபாத்யாயா கொல்கத்தா உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். இந்த வழக்கு கொல்கத்தா உயர் நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி சுஜோய்பால் தலைமையிலான அமர்வு முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது வழக்கறிஞர் அங்கியுடன் ஆஜரான முன்னாள் முதல்வர் மம்தா பானர்ஜி வாதாடினார். அவருடன் கட்சியின் மூத்த தலைவர்கள் சந்திரிமா பட்டாச்சார்யா, கல்யாண் பானர்ஜி ஆகியோர் உடனிருந்தனர்.

# அக்னி நட்சத்திரத்துக்கு இடையே புதுச்சேரியில் இடி மின்னலுடன் பெய்த மழை

புதுச்சேரி:மே.16-

வங்கக் கடலில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியால் கோடை அக்னி நட்சத்திர வெயிலிலும் புதுச்சேரியில் இடி மின்னலுடன் மழை பொழிந்தது.புதுவையில் கோடை காலமான மார்ச், ஏப்ரலில் வெப்பத்தின் தாக்கம் அதிகமானதால் பகலிலும்கூட வீட்டில் மக்கள் முடங்கினர். மே மாத தொடக்கத்திலேயே 100 டிகிரியை வெப்பத்தின் தாக்கம் பதிவானது. இந்நிலையில், அக்னி நட்சத்திரத்தில் வெப்பத்தின் தாக்கம் எப்படியிருக்குமோ என மக்கள் நினைத்திருந்தனர். ஆனால் அக்னி நட்சத்திரம் தொடங்கிய நாளான மே 4ல் மழை பொழிந்தது.

தொடர்ந்து அடுத்தடுத்த நாட்கள் இரவிலும், சில நாட்களில் அதிகாலையிலும் மழைப் பொழிவு தொடர்ந்தது. இருந்தாலும், பகலில் வெயிலின் தாக்கம் இருந்தது. இந்நிலையில்




நேற்று நள்ளிரவு முதல் புதுச்சேரியில் மழை பொழிவு இருந்தது. வானம் இருண்டு குளிர்ந்த காற்றுடன் பலத்த இடியுடன் இன்று காலை முதல் மழைப் பொழிவு தொடர்ந்தது. இதனால் மக்கள் நிம்மதியடைந்தனர். இதுகுறித்து காரைக்காலை சேர்ந்த வானிலை ஆர்வலர் பிரபு பிரபாகர் கூறுகையில், ''புதுச்சேரிக்கு கிழக்கே 350 கி.மீ தொலைவில் தென்மேற்கு வங்கக் கடலில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியும் இதற்கு முக்கிய காரணமானது. தற்போது மேற்கு நோக்கி தாழ்வுப் பகுதி நகர்கிறது. இது புயலாக வலுப்பெற வாய்ப்பு குறைவு. வங்கக் கடலிலேயே வலு குறைந்துவிடும்." என்றார்.

# நெல்லையில் நிமோனியா காய்ச்சலுக்கு 4 வயது சிறுமி பலி

திருநெல்வேலி: மே,16-

திருநல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் பகுதியில் நிமோனியா காய்ச்சலால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த 4 வயது சிறுமி உயிரிழந்த சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. நிமோனியா காய்ச்சல் பாதிப்பால் 40 நாட்களுக்கு மேலாக போராடிய சிறுமி பலியானதாக கூறப்படுகிறது.நெல்லை மேலப்பாளையம், பெரிய குத்பா பள்ளிவாசல் பகுதியை சேர்ந்தவர் ரசூல். இவருடைய மகள் ரிஃப்கா பாத்திமா (வயது 4). இந்த சிறுமிக்கு கடந்த சில நாட்களாக கடுமையான காய்ச்சல் பாதிப்பு இருந்து வந்தது. இதையடுத்து, நெல்லையில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் சிறுமியை அவரது பெற்றோர் சிகிச்சைக்காக சேர்த்தனர். அங்கு சிறுமியை பரிசோதனை செய்த மருத்துவர்கள், சிறுமிக்கு அடினோ வைரஸ் தொற்றால் நிமோனியா காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டிருப்பதை உறுதி செய்தனர். இதை அடுத்து அவருக்கு மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்து வந்தனர். ஆனால், சிகிச்சை பலன் அளிக்காமல் சிறுமி ரிஃப்கா பாத்திமா இன்று உயிரிழந்தார்.நிமோனியா என்பது நுரையீரலை தாக்கும் ஒரு தீவிரமான தொற்று நோய். பாக்டீரியா, வைரஸ் அல்லது பூஞ்சை போன்ற நுண்கிருமிகள் மூலம் இந்த நோய் பரவுகிறது. கிருமி தொற்றால் நுரையீரலில் உள்ள காற்றுப் பைகளில் வீக்கம் ஏற்பட்டு, அவற்றில் நீர் அல்லது சளி கோர்த்துக்கொள்ளும் இதனால் மூச்சு விடுவதில் சிரமம், நெஞ்சு வலி, இருமல் மற்றும் கடுமையான காய்ச்சல் ஏற்படும்.இதனிடையே காய்ச்சலை கட்டுப்படுத்த மாநகராட்சி நிர்வாகம் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். காய்ச்சல் பரவல் குறித்து தகவல் அறிந்த வந்த சுகாதாரத் துறை அதிகாரிகள், மேலப்பாளையத்தில் முகாமிட்டு தீவிர ஆய்வு மேற்கொண்டனர். தொடர்ந்து, சிறுமியின் இறப்பு குறித்து நெல்லை மாவட்ட சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் டாக்டர் முரளி கூறுகையில், "உயிரிழந்த சிறுமிக்கு நுரையீரலில் தீவிர பாதிப்பு இருந்தது. அதனை நிமோனியா காய்ச்சல் என்று மருத்துவத்துறையில் குறிப்பிடுவோம். சிறுமி இறந்ததை தொடர்ந்து அந்த பகுதியில் உள்ள குழந்தைகள் பலருக்கும் உடனடியாக மருத்துவ பரிசோதனைகள் செய்யப்பட்டன. ஆனால், பாதிக்கப்பட்ட அந்த சிறுமியை தவிர வேறு எந்த குழந்தைக்கும் இதுபோல நிமோனியா பாதிப்பு இல்லை" என்றார்

# லாட்வியா பிரதமர் ராஜினாமா

ரிகா:மே,16-

லாட்வியா நாட்டின் பிரதமரான எவிகா சிலினா நேற்று தனது பதவியை ராஜினாமா செய்வதாக அறிவித்தார். ஆளும் கூட்டணியின் ஒரு பகுதியாக இருந்த இடதுசாரி முற்போக்கு கட்சி நேற்று முன்தினம் தனது ஆதரவை வாபஸ் பெறுவதாக அறிவித்தது. இதன் காரணமாக சிலினா பெரும்பான்மையை இழந்தார். இதனை தொடர்ந்து நேற்று அவரது ராஜினாமா அறிவிப்பு வெளியானது.




கடந்த வாரம் உக்ரைன் டிரோன்கள் பலமுறை வழிதவறி லாட்வியா எல்லைக்குள் நுழைந்தது. இந்த சம்பவங்களை அரசு கையாண்ட விதம் தொடர்பாக எழுந்த சர்ச்சையின் காரணமாக முற்போக்கு கட்சியை சேர்ந்த லாட்வியா பாதுகாப்பு துறை அமைச்சர் ஆன்ட்ரீஸ் ஸ்ப்ரூட்ன் ராஜினாமா செய்தது குறிப்பிடத்தக்கது

# ஓமனில் இந்தியக் கொடி ஏந்திய வணிகக் கப்பல் மீது தாக்குதல்

புதுடெல்லி::மே.16-

ஓமன் கடற்கரை அருகே இந்தியக் கொடி ஏந்திய வணிகக் கப்பல் ஒன்று தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது.இது குறித்து மத்திய வெளியுறவு அமைச்சகம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: ஓமன் கடற்கரை அருகே இந்தியக் கொடி ஏந்திய வணிகக் கப்பல் மீது புதன்கிழமை அன்று தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்குதல் நடத்தியது யார் என்பது உடனடியாகத் தெரியவில்லை. இந்தத் தாக்குதல் ஏற்றுக்கொள்ள



முடியாதது. வணிகக் கப்பல்கள் மற்றும் மாலுமிகள் தொடர்ந்து இலக்கு வைக்கப்படுவதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். அதேநேரம் அந்தக் கப்பலில் இருந்த அனைத்து இந்திய ஊழியர்களும் பாதுகாப்பாக உள்ளனர். அவர்களை மீட்ட ஓமன் அதிகாரிகளுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். வணிகக் கப்பல்களை இலக்கு வைப்பது, அப்பாவி ஊழியர்களின் உயிருக்கு ஆபத்தை விளைவிப்பது அல்லது கப்பல் போக்குவரத்து மற்றும் வணிகச் சுதந்திரத்தைத் தடுப்பது போன்ற செயல்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்று இந்தியா மீண்டும் வலியுறுத்துகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ரூ.11 கோடி வருவாய் ஈட்டிய ராகுல் வெளிநாட்டுப் பயணத்துக்கு ரூ.60 கோடி செலவிட்டது எப்படி? பாஜக கேள்வி

புதுடெல்லி:::மே.16-

டெல்லியில் உள்ள பாஜக தலைமையகத்தில் கட்சியின் தேசிய செய்தித் தொடர்பாளர் சாம்பிட் பத்ரா கூறியதாவது: கடந்த 22 ஆண்டுகளில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி 54 முறை வெளிநாடுகளுக்கு பயணம் செய்துள்ளார். இதற்காக மொத்தம் ரூ.60 கோடி செலவிடப்பட்டுள்ளது. ஆனால் கடந்த 10 ஆண்டுகளில் அவர் தாக்கல் செய்த தேர்தல் பிரமாணப் பத்திரங்களில் அவரது மொத்த ஆண்டு வருமானம் சுமார் ரூ.11 கோடி



என குறிப்பிடப்பட்டுள்ளது.ராகுல் காந்தியின் வெளிநாட்டுப் பயணங்களுக்கு யார் நிதியளித்தனர் என்பதை அவரும், காங்கிரஸ் கட்சியும் வெளிப்படுத்த வேண்டும்.எப்சிஆர்ஏ சட்ட விதிகளின்படி ஒரு எம்.பி.யோ அல்லது அரசு அதிகாரியோ வெளிநாடு செல்லும் போது அதற்கான நிதியை ஏதேனும் ஒரு நிறுவனம் அல்லது அமைப்பு வழங்கினால், அவர்கள் மத்திய உள்துறை அமைச்சகத்திடம் முன் அனுமதி பெற வேண்டும்.ஒருவர் தனது சொந்தச் செலவில் வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டால், அந்த விவரத்தை வருமான வரித் தாக்கலின்போது கட்டாயம் குறிப்பிட வேண்டும். இந்த விவரம் மறைக்கப்பட்டு இருந்தால் அவர் மீது 2015ம் ஆண்டு கருப்புப் பணச் சட்ட விதிகளின் கீழ் நடவடிக்கை எடுக்க முடியும். இவ்வாறு அவர் கூறினார்.

# போலீஸார் மீது கல்வீசி தாக்கியதாக பதியப்பட்ட வழக்கில் சவுக்கு சங்கருக்கு ஜாமீன்

சென்னை: மே 16:

ஆந்திராவில் கைது செய்து அழைத்து வந்த போது போலீஸார் மீது கல்வீசி தாக்கி கொலை முயற்சியில் ஈடுபட்டதாக பதிவு செய்யப்பட்ட வழக்கில் பிரபல யூடியூபரான சவுக்கு சங்கருக்கு ஜாமீன் வழங்கி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மிரட்டி பணம் பறித்தல் மற்றும் பணமோசடி ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ், ஆதம்பாக்கம் மற்றும் சைதாப்பேட்டை போலீஸார் சவுக்கு மீடியா சிஇஓ வான யூடியூபர் சவுக்கு சங்கரை கடந்தாண்டு டிச.13 அன்று கைது செய்தனர்.

அந்த வழக்கில் மருத்துவ காரணங்களுக்காக அவருக்கு மார்ச் 25 வரை உயர் நீதிமன்றம் இடைக்கால ஜாமீன் வழங்கியிருந்தது. ஆனால் அந்தக் காலக்கெடு தாண்டி



யும் அவர் சம்பந்தப்பட்ட கீழமை நீதிமன்றத்தில் சரண் அடையவில்லை.

இந்நிலையில், ஆந்திர மாநிலம், ஓங்கோலில் தலைமறைவாகியிருந்த சவுக்கு சங்கரை போலீஸார் கைது செய்து புழல் சிறைக்கு கொண்டு வந்தனர். அப்போது, வரும் வழியில் சிறுநீர் கழிப்பதற்காக போலீஸ் வாகனம் சாலையோரத்தில் நிறுத்தப்பட்டது.மற்றொரு வாகனத்தில் வந்த சிலர் போலீஸாருடன் வாக்கு வாதத்தில் ஈடுபட்டு, ஆபாச வார்த்தைகளால் திட்டி, போலீஸ் வாகனம் மீது கல்வீசி தாக்குதலில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டது.இதையடுத்து, போலீஸார் மீது கல்வீசி கொலை முயற்சியில் ஈடுபட்டதாக சவுக்கு சங்கர் மீதும், அவருக்கு ஆதரவாக மற்றொரு வாகனத்தில் வந்தவர்கள் மீதும் கொலை முயற்சி வழக்கு பதியப்பட்டது.அந்த வழக்கில் தனக்கு ஜாமீன் கோரி சவுக்கு சங்கர் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார். அதில், ``அரசியல் அழுத்தம் காரணமாக போலீஸார் தன் மீதுள்ள காழ்ப்புணர்ச்சியால் உள்நோக்கத்துடன் இந்த பொய் வழக்கை பதிவு செய்துள்ளனர்.போலீஸாரை கல்வீசி தாக்கி கொலை முயற்சியில் ஈடுபட்டதாக எனக்கு எதிராக பொய்யான கதை புனையப்பட்டுள்ளது. அப்படி ஒரு சம்பவமே நடைபெறவில்லை'' எனக் கூறியிருந்தார்.இந்த மனு நீதிபதி எல்.விக்டோரியா கவுரி முன்பாக விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் அருண் அன்புமணி, ``போலீஸார் சவுக்கு சங்கர் மீது வழக்கு மேல் வழக்கு என பல்வேறு வழக்குகளை பதிவு செய்துள்ளனர்'' என்றார்.

அதற்கு ஆட்சேபம் தெரிவித்து அரசு தரப்பில் ஆஜரான கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் ஆ. தாமோதரன், ``உயர் நீதிமன்றம் அளித்த இடைக்கால ஜாமீன் முடிவடைந்த பின்னரும் அவர் நீதிமன்றத்தில் சரணடையாமல் தலைமறைவானார்.

சவுக்கு சங்கர் மீது 48 வழக்குகள் நிலுவையில் உள்ளன. உயர் நீதிமன்ற உத்தரவுப்படியே ஆந்திரா ஓங்கோலில் தலைமறைவாக இருந்த அவரை தனிப்படை போலீஸார் கைது செய்தனர்.சிறையில் அடைக்க கொண்டு வந்த போது போலீஸாரின் வாகனம் மீது கல்வீச்சில் ஈடுபட்டு அவரை மீட்க முற்பட்டனர். அதன் காரணமாகவே, கொலை முயற்சி வழக்குப் பதியப்பட்டுள்ளது'' என வாதிட்டார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, ``கொலை முயற்சியில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்ட சவுக்கு சங்கர் தினமும் புழல் காவல் நிலையத்தில் ஆஜராகி கையெழுத்திட வேண்டும், விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டும்'' என்ற நிபந்தனையுடன் ஜாமீன் வழங்கி உத்தரவிட்டார்.



# தான் பணியாற்றிய அரசுப் பள்ளிக்கே 1.17 ஏக்கர் நிலத்தை வாரி வழங்கிய பட்டதாரி ஆசிரியரின் குடும்பம்!

கள்ளக்குறிச்சி. மே.16

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை தாலுகா, காட்டுஎடையார் கிராமத்தில் ஒரு நெகிழ்ச்சியான அறப்பணி அரங்கேறியுள்ளது.

**ஆசிரியரின் நினைவாக நிலதானம்:**

அப்பகுதியில் உள்ள அரசுப் பள்ளியில் பட்டதாரி ஆசிரியராகப் பணியாற்றி காலம் சென்ற சிவராமகிருஷ்ணன் என்பவரின் நினைவாக, அவரது குடும்பத்தினர் ஒரு உன்னத முடிவை எடுத்தனர். அதன்படி, தங்களுக்குச் சொந்தமான 1 ஏக்கர் 17 செண்ட் நிலத்தை அந்த அரசுப் பள்ளியின் வளர்ச்சிக்காகத் தானமாக வழங்க முன்வந்தனர்.

**ஒப்படைப்பு:**

இதற்கான ஆவணங்களை சிவராமகிருஷ்ணனின் குடும்பத்தினர், கள்ளக்குறிச்சி மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கார்த்திகா அவர்களிடம் நேரில் ஒப்படைத்தனர்.

தான் பணியாற்றிய பள்ளியின் மீது கொண்ட பற்றின் காரணமாக, ஒரு ஆசிரியரின் குடும்பமே நிலத்தை தானமாக வழங்கியிருப்பது அப்பகுதி மக்களிடையே பெரும் நெகிழ்ச்சியையும், பாராட்டுகளையும் பெற்றுள்ளது. இச்செயல் கல்வித் துறை வட்டாரத்தில் ஒரு முன்மாதிரிச் செயலாகப் பார்க்கப்படுகிறது.

# பல்லடத்தில் பாய்ந்த போலீஸ்! 708 கிலோ புகையிலை பறிமுதல் குஜராத் மற்றும் ராஜஸ்தான் ஆசாமிகள் பிடிபட்டனர்

திருப்பூர். மே.16

திருப்பூர் மாவட்டம் பல்லடம் அருகே காரில் சட்டவிரோதமாகப் புகையிலைப் பொருட்கள் கடத்தப்படுவதாகப் போலீசாருக்கு ரகசியத் தகவல் கிடைத்தது. இதனடிப்படையில் பல்லடம் காவல் ஆய்வாளர் தலைமையிலான போலீசார் கரைப்புதூர் பகுதியில் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது அந்த வழியாக வந்த Mahindra XUV காரை நிறுத்திச் சோதனையிட்டபோது, அதில் சுமார் 708 கிலோ தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் கடத்தி வரப்படுவது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, கடத்தலில் ஈடுபட்ட குஜராத்தைச் சேர்ந்த லோகீந்திர பாபா பாய் (33) மற்றும் ராஜஸ்தானைச் சேர்ந்த ராஜேந்திரன் (29) ஆகிய இருவரைப் போலீசார் அதிரடியாகக் கைது செய்தனர். அவர்களிடமிருந்த 708 கிலோ புகையிலைப் பொருட்கள் மற்றும் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட கார் பறிமுதல் செய்யப்பட்டது.

**காவல்துறை எச்சரிக்கை:**

கைது செய்யப்பட்ட இருவரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். போதைப் பொருட்கள் கடத்தல் மற்றும் விற்பனை குறித்துத் தகவல் தெரிந்தால் பொதுமக்கள் உடனடியாகத் தெரிவிக்கலாம் எனத் திருப்பூர் மாவட்ட காவல்துறை கேட்டுக்கொண்டுள்ளது.

# ஒரே நாளில் பவுனுக்கு ரூ.2,280 சரிந்த தங்கம்

சென்னை:மே,16-

சென்னையில் இன்று (மே.15) காலை 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை பவுனுக்கு ரூ.800 குறைந்த நிலையில், மாலையில் பவுனுக்கு மேலும் ரூ.1,480 குறைந்தது. அந்த வகையில் ஒரே நாளில் தங்கம் விலை பவுனுக்கு 2,280 சரிந்தது.இந்தியா தனது தங்க நுகர்வில் கிட்டத்தட்ட முழுவதையும் இறக்குமதி மூலமாகவே பூர்த்தி செய்கிறது. இந்நிலையில் அந்நியச் செலாவணிக் கையிருப்பைப் பாதுகாக்க உதவும் வகையில், ஓராண்டுக்கு தங்கம் வாங்குவதை தவிர்க்குமாறு மக்களுக்கு பிரதமர் மோடி ஞாயிற்றுக்கிழமை அறிவுறுத்தினார்.தங்கம், வெள்ளியின் வெளிநாட்டு கொள்முதலைக் கட்டுப்படுத்தவும் நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு மீதான அழுத்தத்தைக் குறைக்கவும் எடுக்கப்படும் முயற்சிகளின் ஒரு பகுதியாக, மே 12ம் தேதியன்று தங்கம் மற்றும் வெள்ளி மீதான இறக்குமதி வரியை மத்திய அரசு 6லிருந்து 15% ஆக உயர்த்தியது. இதனைத் தொடர்ந்து மே 13ம் தேதி, தங்கம் விலை பவுனுக்கு ரூ.5,360 அதிரடியாக உயர்ந்தது. அன்றைய தினமே மாலையில் குறைந்தாலும், நேற்று (மே 14) மீண்டும் உயர்ந்தது.இந்நிலையில், சென்னையில் இன்று (மே 15) 22 காரட் ஆபரணத் தங்கம் விலை கிராமுக்கு ரூ.100 குறைந்து, ஒரு கிராம் ரூ.ரூ.14,950க்கும், பவுனுக்கு ரூ.800 குறைந்து ஒரு பவுன் ரூ.1,19,600க்கும் விற்பனை செய்யப்பட்டது.

அதன்பின், மாலையில் தங்கம் விலை கிராமுக்கு ரூ.185 குறைந்து ஒரு கிராம் ரூ.14,765க்கும், பவுனுக்கு ரூ.1,18,120க்கும் விற்பனையாகிறது.

வெள்ளி விலை காலையில் கிராமுக்கு ரூ.10ம், கிலோவுக்கு ரூ.10 ஆயிரமும் குறைந்து, ஒரு கிராம் ரூ.305க்கும், ஒரு கிலோ ரூ.3 லட்சத்து 5 ஆயிரத்துக்கும் விற்பனை செய்யப்பட்ட நிலையில், மாலையில் எந்த மாற்றமும் இன்றி விற்பனையாகிறது.

தங்கம் மற்றும் வெள்ளி மீதான இறக்குமதி வரியின் தாக்கத்தை தாண்டி, ஈரான் அமெரிக்கா மோதல் போக்கு உள்ளிட்ட சர்வதேச காரணிகளால் தங்கம் மீதான முதலீடு குறைந்துள்ளது. இதுவும் ஆபரணத் தங்கம் விலை சரிவுக்கு காரணம். அதேவேளையில், கச்சா எண்ணெய் விலை அதிகரிப்பின் தாக்கத்தால் அமெரிக்க டாலர் மதிப்பு கூடி வருகிறது.இதனிடையே, இன்று இந்திய ரூபாய் மதிப்பு வரலாறு காணாத வீழ்ச்சி கண்டுள்ளது. இன்றைய வர்த்தகத்தின் இடையே அமெரிக்க டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு ரூ.96 என கடும் வீழ்ச்சி கண்டதும் கவனிக்கத்தக்கது.

# சீனா எச்சரித்த பிறகும் ஆதரவு: அமெரிக்காவுக்கு தைவான் நன்றி

தைபே:மே.16-

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் 3 நாள் பயணமாக சீனா சென்றுள்ளார். சீன அதிபர் ஜி ஜின் பிங்கை அவர் நேற்று சந்தித்தார். அப்போது, "சீன ஞ் அமெரிக்க உறவில் தைவான் பிரச்சினை மிக முக்கியமானது. அதை சரிவர கையாளாவிட்டால் சீனா ஞ் அமெரிக்கா இடையே மோதல் ஏற்பட்டு உறவும் ஆபத்தில் சிக்கும்"என்று ஜின்பிங் எச்சரித்தார்.சுயாட்சி தீவான தைவானை சீனா சொந்தம் கொண்



டாடி வருவதை ஏற்காத அமெரிக்கா, தொடந்து தைவானுக்கு ஆதரவு அளித்து வருகிறது. இந்நிலையில் ஜின்பிங்கின் எச்சரிக்கை பதற்றத்தை ஏற்படுத்தியது.இதுகுறித்து தைவான் பிரதமரின் செய்தித் தொடர்பாளர் மிஷேல் லீ கூறுகையில், "பிராந்திய ஸ்திரத் தன்மைக்கு பங்களிக்கும் மற்றும் சர்வாதிகார விரிவாக்கத்தால் ஏற்படக்கூடிய அபாயங்களை நிர்வகிக்கும் அனைத்து நடவடிக்கைகளையும் எங்கள் அரசு சாதகமாகப் பார்க்கிறது.தேசியப் பாதுகாப்பு மற்றும் ராஜதந்திரம் தொடர்பாக அமெரிக்காவுடன் தைவான் நெருங்கிய தொடர்பில் இருக்கிறது. தைவானை ஆதரிக்கும் தனது உறுதியான நிலைப்பாட்டை அமெரிக்காவும் பலமுறை தொடர்ந்து வலியுறுத்தியுள்ளது. இதற்காக நன்றி தெரிவிக்கிறோம். இவ்வாறு மிஷேல் லீ கூறினார்.

# சீன அதிபருடன் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் சந்திப்பு: ஈரான் போர் குறித்து தீவிர ஆலோசனை

பெய்ஜிங்::மே.16-

அரசு முறைப் பயணமாக சீனா சென்றுள்ள அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப், அந்நாட்டு அதிபர் ஜி ஜின்பிங்குடன் நேற்று வரலாற்றுச் சிறப்புமிக்க பேச்சுவார்த்தைகளைத் தொடங்கினார். ஏறக்குறைய 10 ஆண்டுகளுக்குப் பிறகு அமெரிக்க அதிபர் ஒருவர் சீனாவுக்குப் பயணம் மேற்கொள்வது இதுவே முதல் முறை. முன்னதாக, 2017ம் ஆண்டு டிரம்ப் தனது முதல் பதவிக் காலத்தில் பெய்ஜிங் சென்றிருந்தார். பெய்ஜிங்கில் நடைபெற்ற ஜின்பிங் உடனான சந்திப்பின் போது டிரம்ப் பேசுகையில், "ஜி ஜின்பிங் ஒரு சிறந்த தலைவர். கடந்த காலங்களில் நமக்கிடையே ஒரு சில கருத்து வேறுபாடுகள் இருந்த போ



திலும், அவற்றை நாம் சுமுகமாகத் தீர்த்துக் கொண்டோம். அமெரிக்கா சீனா இடையே முன்னெப்போதும் இல்லாத வகையில் மிகச்சிறந்த உறவு இனிவரும் காலங்களில் அமையும். நாம் இணைந்து ஒரு அற்புதமான எதிர்காலத்தை உருவாக்குவோம்" என்றார்.சீன அதிபர் ஜி ஜின்பிங் கூறுகையில், "அமெரிக்காவும் சீனாவும் பரஸ்பரம் போட்டி நாடுகளாக இல்லாமல், கூட்டாளிகளாகச் செயல்பட வேண்டும். வர்த்தகப் போரில் எவருக்கும் வெற்றி கிடைக்காது. 2026ம் ஆண்டு இரு நாட்டு உறவுகளில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கும் மைல்கல் ஆண்டாக அமையும்" என்று நம்பிக்கை தெரிவித்தார்.

அதிபர் டிரம்புடன் எலான் மஸ்க் (டெஸ்லா), டிம் குக் ( ஆப்பிள்), ஜென்சன் ஹுவாங் (என்விடியா) மற்றும் லாரி ஃபிங்க் ( பிளாக்ராக் ) உள்ளிட்ட அமெரிக்காவின் முன்னணித் தொழில் அதிபர்கள் பெய்ஜிங் சென்றுள்ளனர்.

"சீனாவை இன்னும் ஒரு படி முன்னேற்றப் பாதைக்குக் கொண்டு செல்ல, இந்தத் திறமையான மனிதர்கள் தங்கள் மாயாஜாலத்தைப் புரிய சீனா தனது கதவுகளைத் திறந்துவிட வேண்டும் என்பதே ஜி ஜின்பிங்கிடம் எனது முதல் கோரிக்கையாக இருக்கும்" என்று டிரம்ப் தனது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

மேற்கு ஆசியாவில் நிலவும் போர்ச் சூழல் மற்றும் அதன் விளைவாக ஏற்பட்டுள்ள உலகளாவிய எரிசக்தி தட்டுப்பாடு குறித்து இந்த மாநாட்டில் முக்கியமாக விவாதிக்கப்பட்டது. குறிப்பாக, ஹார்முஸ் ஜலசந்தியில் நிலவும் முடக்கத்தை முடிவுக்குக் கொண்டு வருவது குறித்து இருதரப்பும் ஆலோசித்தது.ஈரான் அணு ஆயுதங்களை உருவாக்காது என்ற உத்தரவாதத்தின் அடிப்படையில், அந்த ஜலசந்தியை மீண்டும் திறக்கச் செய்ய சீனா எடுக்கும் முயற்சிகளுக்கு அமெரிக்கா முக்கியத்துவம் அளிக்கிறது. சுமார் இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக நீடித்த இந்த முதல் கட்டச் சந்திப்பின்போது, தைவான் விவகாரம் மற்றும் வர்த்தக வரி விதிப்புகள் குறித்தும் விவாதிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

# "விபத்தில்லா பட்டாசுத் தொழிலுக்கு விரைவில் வல்லுநர் குழு" அமைச்சர் கீர்த்தனா தகவல்

விருதுநகர்:மே,16-

"விபத்தில்லாமல் பட்டாசுத் தொழிலை மேற்கொள்ள வல்லுநர் குழு விரைவில் அமைக்கப்படும். கொடுத்த வாக்குறுதிகளை ஒவ்வொன்றாக நிறைவேற்றி வருகிறோம்" என்று தமிழக அமைச்சர் கீர்த்தனா தெரிவித்தார்.

சிவகாசி தொகுதியில் தவெக சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்று அமைச்சராக பொறுப்பேற்றுள்ள கீர்த்தனா இன்று விருதுநகர் வந்தார். அரசு ஆய்வு மாளிகையில் அவருக்கு மாவட்ட ஆட்சியர் சுகபுத்ரா பூங்கொடுத்து கொடுத்து வரவேற்றார். எஸ்.பி. ஸ்ரீநாதா மற்றும் அதிகாரிகளும் அமைச்சர் கீர்த்தனாவுக்கு வரவேற்பு அளித்தனர்.அதையடுத்து, அதிகாரிகளுடன் சற்றுநேரம் அமைச்சர் கீர்த்தனா ஆலோசனை நடத்தினார். அதைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், "விருதுநகர் மாவட்டத்தில் பட்டாசுத் தொழிலை பாதுகாக்கவும், விபத்து இல்லாமல் இத்தொழிலை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக வல்லுநர்கள் கொண்ட குழு விரைவில் அமைக்கப்படும். அதில், அதிகாரிகள், பட்டாசு ஆலை உரிமையாளர்கள், தொழிலாளர்கள் என மூன்று தரப்பினரும் கலந்துரையாடி அவர்களே சிறந்த முடிவுகளை எடுப்பார்கள். அவர்களின் குரலாக நாங்கள் இருப்போம். இதுவரை இதுவரை இப்படிக் குழுக் கூட்டம் நடத்தப்படவில்லை. வரலாற்றில் இதுவே முதல் முறை. பட்டாசு ஆலை உரிமையாளர்களுடன் ஒரு கலந்தாய்வு கூட்டம் நடத்த உள்ளோம். அமைச்சர்களுக்கான துறைகள் இரு நாள்களில் அறிவிக்கப்படும். மகளிர் உரிமைத் தொகை ஆயிரம் வரவு வைக்கப்பட்டுள்ளது. மாதம் ரூ.2,500 வழங்குவோம் என்று வாக்குறுதி கொடுத்துள்ளோம். கொடுத்த வாக்குறுதிகளை ஒவ்வொன்றாக நிறைவேற்றி வருகிறோம். எப்படிப்பட்ட நடவடிக்கைகளை முதல்வர் எடுத்து வருகிறார் என்பது டாஸ்மாக் விஷயத்திலேயே உங்களுக்குத் தெரிந்திருக்கும். நாங்கள் புதிய ஆட்சி அமைத்துள்ளோம்.கடந்த ஆட்சியில் இதுவரை ரூ.10.50 லட்சம் கோடி கடன் வாங்கி வைத்துள்ளார்கள். என்ன நடந்துள்ளது என்று முதலில் எங்களுக்குத் தெரியவேண்டும். உரிய கால அவகாசம் கொடுத்தால் அனைத்தையும் செய்வோம்" என்று அமைச்சர் கீர்த்தனா கூறினார். மேலும், கூட்டணிக் கட்சிகளுக்கு அதிகாரத்தில் பங்கு கொடுக்க வாய்ப்பு உள்ளதா என்ற கேள்விக்கு, "இதற்கு தலைவர் பதில் கொடுப்பார். அவர் என்ன கூறினாலும் மக்கள் நலனுக்காகத்தான் இருக்கும். சற்று பொறுத்திருந்து பார்ப்போம்" என்று பதில் அளித்தார்.

# கோவாவில் நீட் தேர்வு எழுதிய மாணவர் தற்கொலை

## கெஜ்ரிவால் நேரில் ஆறுதல்

பனாஜி:மே,16-

கோவாவில் நீட் தேர்வெழுதிய மாணவர் தற்கொலை செய்து கொண்டார். இளநிலை நீட் வினாத்தாள் கசிந்ததால், அந்த நுழைவுத்தேர்வு ரத்து செய்யப்பட்டது. இந்த தேர்வை எழுதிய பல லட்சம் தேர்வர்களில், கோவாவைச் சேர்ந்த மாணவர் (17), தேர்வு முடிவுகள் மற்றும் முறைகேடு புகார்களால் கடும் மன உளைச்சலுக்கு ஆளாகி இருந்தார். அவர் நேற்று முன்தினம் இரவு தனது வீட்டில் தற்கொலை செய்து கொண்டார். காவல்துறையினர் நடத்திய விசாரணையில், போட்டித் தேர்வுகளால் ஏற்பட்ட அழுத்தம் காரணமாகவே இந்த விபரீத முடிவை அவர் எடுத்ததாக தற்கொலை கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது தெரியவந்தது.



மேலும், அந்த மாணவர் மீது தேர்வில் அதிக மதிப்பெண் பெற வேண்டும் என்ற அழுத்தம் இருந்ததாக குடும்பத்தினர் தெரிவித்த தகவல்கள் போலீசார் நடத்திய விசாரணையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், 2027ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலை ஒட்டி கட்சியை வலுப்படுத்தும் பணிகளுக்காக கோவா சென்றுள்ள ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால், உயிரிழந்த மாணவரின் குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.தேர்தல் பகுப்பாய்வு


பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், 'நீட் தேர்வு வினாத்தாள் கசிவு மற்றும் முறைகேடுகளில் பாஜகவினருக்கு தொடர்பு உள்ளது. பாஜக ஆளும் மாநிலங்களில் தான் வினாத்தாள் கசிவு சம்பவங்கள் நடக்கின்றன. இச்சம்பவம் குறித்து சிபிஐ விசாரணை நடத்தினால் அது உண்மைகளை மறைக்கும் செயலாகவே இருக்கும். இதில் பெரிய புள்ளிகள் சம்பந்தப்பட்டிருப்பதால், 3 அல்லது 4 மாதங்களில் குற்றவாளிகள் அனைவரும் வெளியே வந்துவிடுவார்கள்' என்று கூறினார்

# அமெரிக்காவில் சிறிய ரக விமானம் வீட்டின் மீது விழுந்து விபத்து 2 பேர் உயிரிழப்பு

வாஷிங்டன்: மே,16-

அமெரிக்காவில் ஒஹியோ மாகாணம் (Ohio State) அக்ரான் (Akron) விமான நிலையத்தில் இருந்து நேற்று மாலை சிறிய ரக விமானம் புறப்பட்டது. விமானத்தில் 2 பேர் பயணித்தனர். அக்ரான் விமான நிலையத்தில் இருந்து சுமார் 3 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஒரு வீட்டின் மீது திடீரென அந்த விமானம் விழுந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் விமானம் தீப்பற்றி எரிந்தது. விமானத்தில்



பயணித்த இருவரும் உயிரிழந்ததாக மாநில நெடுஞ்சாலை ரோந்துப் பிரிவு தெரிவித்துள்ளது. விமானம் வீட்டின் மீது மோதியபோது, ஒரு தம்பதியினரும் அவர்களது இரு குழந்தைகளும் அந்த வீட்டிற்குள் இருந்ததாகவும், அவர்கள் அனைவரும் பத்திரமாக இருப்பது மிகவும் அதிர்ஷ்டவசமானது என அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இதனிடையே விபத்தில் சிக்கிய வீட்டில் இருந்தவர்களும், அந்த வீட்டிற்கு அருகில் இருந்த குடியிருப்பும் காலி செய்யப்பட்டதாகவும், அதில் இருந்தவர்களுக்கு எந்தக் காயமும் ஏற்படவில்லை என்றும் அக்ரான் தீயணைப்புத் துறை தெரிவித்துள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்

# முக்கூடலில் 15 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை தந்த டிரைவர் ராமச்சந்திரனுக்கு ஆயுள் தண்டனை விதிப்பு!

நெல்லை:மே,16-

முக்கூடலில் 15 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை தந்த டிரைவர் ராமச்சந்திரனுக்கு ஆயுள் தண்டனை விதித்து நெல்லை போக்சோ சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டது. 2018ம் ஆண்டு இரவு நேரத்தில் ஆட்டோவில் வந்த சிறுமிக்கு ராமச்சந்திரன் பாலியல் தொல்லை அளித்துள்ளார். சிறுமியின் பெற்றோர் அளித்த புகாரின் பேரில் டிரைவர் ராமச்சந்திரன் மீது போக்சோவில் வழக்குப்பதிவு செய்யப்பட்டது. பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ரூ.3 லட்சம் இழப்பீடு வழங்கவும் நெல்லை போக்சோ சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது

# 27 மெட்ரோ ரயில் நிலையங்களில் கூடுதலாக 55 நகரும் படிக்கட்டுகள் திறப்பு

சென்னை:மே16-

சென்னையில் 27 மெட்ரோ ரயில் நிலையங்களில், பயணிகளின் வசதிக்காக, கூடுதலாக 55 நகரும் படிக்கட்டுகள் திறக்கப்பட்டுள்ளன. சென்னையில், 2 வழித்தடங்களில் 54 கி.மீ. தொலைவுக்கு மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுகின்றன.

பாதுகாப்பான, விரைவான, சொகுசான பயணம் காரணமாக, மெட்ரோ ரயில்களில் பயணிப்போர் எண்ணிக்கை நாள்தோறும் உயர்கிறது. பயணிகளின் எண்ணிக்கை உயர்வதற்கு ஏற்ப, அவர்களின் தேவைகளை, வசதிகளை நிறைவேற்றுவது அவசியமாகிறது.அந்த வகையில், சென்னை மெட்ரோ ரயில் முதல் கட்டம் மற்றும் அதன் நீட்டிப்பு வழித் தடத்



தில் உள்ள 27 மெட்ரோ ரயில் நிலையங்களில், 55 நகரும் படிக்கட்டுகள் நிறுவப்பட்டுள்ளன.இந்த கூடுதல் வசதியை, மெட்ரோ ரயில் பயணிகள் திறந்து வைத்தனர். இந்நிகழ்வில், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் இயக்குநர் மனோஜ் கோயல், (அமைப்புகள் மற்றும் இயக்கம்), தலைமை ஆலோசகர் கோபிநாத் மல்யா (இயக்கம் மற்றும் பராமரிப்பு), பொதுமேலாளர் எஸ்.சதீஷ் பிரபு (இயக்கம் மற்றும் பராமரிப்பு) உள்பட பலர் கலந்து கொண்டனர்.இது குறித்து, சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது: இந்த கூடுதல் வசதியின் மூலம், ஏற்கனவே இருந்த 226 நகரும் படிக்கட்டுகளுடன், புதிதாக நிறுவப்பட்டுள்ள 55 நகரும் படிக்கட்டுகளும் சேர்த்து நகரும் படிக்கட்டுகளின் எண்ணிக்கை தற்போது 281 ஆக உயர்ந்து உள்ளன.குறிப்பாக, திருமங்கலம் மற்றும் அண்ணா நகர் கிழக்கு மெட்ரோ ரயில் நிலையங்களில் தலா 5 நகரும் படிக்கட்டுகளும், வடபழனி மெட்ரோ ரயில் நிலையத்தில் 4 நகரும் படிக்கட்டுகளும், ஆயிரம் விளக்கு, அண்ணா நகர் கோபுரம் மற்றும் அரசினர் தோட்டம் ஆகிய மெட்ரோ ரயில் நிலையங்களில் தலா 3 நகரும் படிக்கட்டுகளும், ஏஜிடிஎம்எஸ், ஈக்காட்டுதாங்கல், கிண்டி, தியாகராஜ கல்லூரி, விம்கோநகர் பணிமனை, சென்ட்ரல், வண்ணாரப்பேட்டை, எல்ஐசி, நேரு பூங்கா, விமான நிலையம், அசோக் நகர், எழும்பூர், நந்தனம் ஆகிய மெட்ரோ ரயில் நிலையங்களில் தலா 2 நகரும் படிக்கட்டுகளும், பரங்கிமலை, சின்னமலை, உயர்நீதிமன்றம், மண்ணடி, தேனாம்பேட்டை, தண்டடையார் பேட்டை ஆகிய மெட்ரோ ரயில் நிலையங்களில் தலா ஒரு நகரும் படிக்கட்டுகளும் கூடுதலாக நிறுவப்பட்டுள்ளன.இந்த நகரும் படிக்கட்டுகளை நிறுவி செயல்படுத்தும் பணி பெரும் சவாலாக இருந்தது. ஆனாலும், மெட்ரோ ரயில் சேவைகள் இல்லாத நேரங்களில் இப்பணிகளை மேற்கொண்டு, வெற்றிகரமாக நிறைவு செய்தனர். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# மானியம் வேண்டுமா? அப்போ மே 30க்குள் இதைச் செய்யுங்க! தென்காசி மாவட்ட விவசாயிகளுக்கு ஆட்சியர் வேண்டுகோள்

தென்காசி மே 16-
தமிழகத்தில் விவசாயிகளுக்கெனப் பிரத்யேகமாக மின்னணு முறையில் அடையாள எண் வழங்கும் திட்டம் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை மாநில அளவில் 74.38 சதவீத விவசாயிகள் தங்களது விபரங்களைப் பதிவு செய்து அடையாள எண் பெற்றுள்ளனர்.



தென்காசி மாவட்ட ஆட்சியர் ஏ.கே. கமல்கிஷோர், இ.ஆ.ப., இது குறித்து வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் ஆதார் எண் போன்றே தனித்துவமான அடையாள எண் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார். இதுவரை 60,742 விவசாயிகள் இந்தச் சிறப்பு முகாம்கள் மூலம் பயன் பெற்றுள்ளனர்.*ஏன் இந்த அடையாள எண் கட்டாயம்?*இனி வரும் காலங்களில் மத்திய மற்றும் மாநில அரசுகள் வழங்கும் அனைத்து வகையான வேளாண் மானியங்களும் இந்த அடையாள எண்ணின் அடிப்படையிலேயே வழங்கப்படும். குறிப்பாக, பி.எம்.கிசான் (PM-Kisan) திட்டத்தின் கீழ் கௌரவ ஊக்கத்தொகை பெறும் விவசாயிகள் இந்த எண்ணைப் பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. தென்காசி மாவட்டத்தில் இத்திட்டத்தில் பயனடைந்து வரும் விவசாயிகளில் இன்னும் 4,306 பேர் பதிவு செய்யாமல் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.*கடைசி வாய்ப்பு மே 30:*மாவட்டம் முழுவதிலும் இன்னும் பதிவு செய்யாமல் உள்ள 10,700 விவசாயிகள், வரும் மே 30, 2026க்குள் தங்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டும். இதற்காக கடந்த 11.05.2026 முதல் மாவட்டத்தின் அனைத்து கிராமங்களிலும் வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் சகோதரத் துறை அலுவலர்கள் மூலம் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.*பதிவு செய்வது எப்படி?*விவசாயிகள் அருகில் உள்ள பொது சேவை மையங்கள் (சிஷிசி), வேளாண்மை விரிவாக்க மையங்கள் அல்லது கிராமங்களில் நடைபெறும் முகாம்களுக்கு நேரில் சென்று இலவசமாகப் பதிவு செய்யலாம்.
*தேவைப்படும் ஆவணங்கள்:* ஆதார் அட்டை நகல், நில ஆவணங்களின் நகல்கள் (பட்டா, சிட்டா), ஆதாருடன் இணைக்கப்பட்ட செல்போன் எண். "விவசாயப் பெருமக்கள் அனைவரும் இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி, காலக்கெடு முடிவதற்குள் அடையாள எண் பெற்று, அரசின் சலுகைகளைத் தடையின்றிப் பெற வேண்டும்" என மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கிஷோர் கேட்டுக்கொண்டுள்ளார்.



■ சேலம் வடக்கு சட்டமன்றத் தொகுதி த.வெ.க சட்டசபை உறுப்பினர் சிவகுமார், தனது புதிய சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



■ ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி தொகுதி கொடுமுடி வட்டம், பாசூர் பேரூராட்சியின் தூய்மை பணியாளர்களுடன் தவெக நிர்வாகிகள், ச.ஜோசப் விஜய் தமிழக முதலமைச்சராக பொறுப்பேற்று கொண்டதன் வெற்றியை இனிப்பு வழங்கி கொண்டாடினார்கள். நிகழ்ச்சியில் தமிழக வெற்றிக் கழகத்தின் பாசூர் பேரூர் செயலாளர் மு.ஞானசேகரன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



■ ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி தொகுதி கொடுமுடி ஒன்றியம் கிளாம்பாடியில் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் ச.ஜோசப் விஜய் தமிழக முதல்வராக பதவி ஏற்றுக் கொண்டதையும், டி.சண்முகன் எம்ஏல்ஏவாக பதவி ஏற்றுக்கொண்டதையும் கொண்டாடும் விதமாக கிளாம்பாடி பேரூராட்சி தமிழக வெற்றிக் கழகத்தின் கிளாம்பாடி பேரூர் செயலாளர் வி.அருண்குமார் மற்றும் பொறுப்பாளர்கள் தலைமையில் வெற்றி கொண்டாட்டம் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்வில் சுவாமிக்கு சிறப்பு பூஜைகள் மற்றும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.



■ திருப்பூர் முதலிபாளையத்தில் உள்ள நிப்ட்டீ (NIFT-TEA) ஃபேஷன் கல்லூரியில் ஆட்சியர் டாக்டர் மணீஷ் நாரணவரே ஆய்வு. கல்லூரியின் நவீன ஆய்வகங்கள், பயிற்சி மையங்கள் மற்றும் திறன் மேம்பாட்டு மையங்களைப் பார்வையிட்டார். மாணவர்களின் கலைத்திறன் மற்றும் படைப்பாற்றல் செயல்பாடுகள் குறித்து ஆட்சியர் கேட்டறிந்தார். ஆய்வின் போது கல்லூரியின் தலைமை ஆலோசகர் ராஜா சண்முகம், கல்லூரித் தலைவர் ஆர்.கோவிந்தராஜ், முதல்வர் டாக்டர் ஆர்.ராதாமணி உள்ளிட்டோர் பங்கேற்பு.பின்னலாடைத் துறைக்குத் தேவையான மனிதவள மேம்பாடு குறித்து விரிவான ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன.



# பதவியேற்ற கையோடு அதிரடி! திருப்பூரில் 'தவெக' எம்.எல்.ஏ பாலமுருகன் மின்னல் வேக ஆய்வு

திருப்பூர் மே,16-
தமிழக சட்டமன்றத் தேர்தலில் தமிழக வெற்றி கழகத்தின் சார்பில் திருப்பூர் தெற்கு தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற பாலமுருகன் எம்.எல்.ஏ, பதவியேற்ற பின் முதல்முறையாகத் தொகுதிக்குள் அதிரடி ஆய்வுகளை மேற்கொண்டார்.*அதிரடி உத்தரவு:*திருப்பூர் மாநகராட்சி பகுதிகளில் நடைபெற்று வரும் மேம்பாலப் பணிகளைப் பார்வையிட்ட அவர், போக்குவரத்து நெரிசலைக் கருத்தில் கொண்டு, பணிகளை விரைந்து முடித்து ஒரு மாத காலத்திற்குள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.*மக்கள் நலன்:*தொடர்ந்து திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் மத்திய பேருந்து நிலையத்திற்குச் சென்று, பயணிகளுக்கான வசதிகள் மற்றும் மருத்துவக் குறைகள் குறித்து நேரில் ஆய்வு செய்தார்.*செய்தியாளர்கள் சந்திப்பு:*பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "திருப்பூரின் போக்குவரத்து நெரிசலைத் தீர்க்க முழுமையான திட்டங்கள் வகுக்கப்படும். பள்ளி மற்றும் பேருந்து நிலையங்கள் அருகே இருந்த டாஸ்மாக் கடைகள் மூடப்ப ட்டு வருவது மற்றும் எமது தலைவரின் மக்கள் நலச் செயல்பாடுகள் பொதுமக்களிடையே பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது," எனத் தெரிவித்தார்.



■ திருப்பூர் மாநகராட்சி ஆணையர் எம்.பி.அமித், மாநகரப் பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகளை நேரில் ஆய்வு செய்தார். மாநகராட்சி மண்டலம்4, வார்டு எண் 36க்கு உட்பட்ட நடராஜ் தியேட்டர் பின்புறம் பாயும் நொய்யல் ஆற்றின் இருபுறமும் கரைகள் அமைக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. இந்தப் பணிகளை நேரில் பார்வையிட்ட ஆணையர், கரைகளின் உறுதித்தன்மை மற்றும் கட்டுமானப் பணிகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின் போது துப்புரவு அலுவலர் ராஜேந்திரன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

## கோடிக்கணக்கான முதலீடு ஒப்பந்த விவகாரம்

# அதானி மீதான லஞ்ச புகார்கள் ரத்து: அமெரிக்க நீதிமன்ற உத்தரவால் திருப்பம்

வாஷிங்டன்:மே 16-
அமெரிக்காவில் அதானி குழுமத்தின் மீதான ஊழல் மற்றும் மோசடி வழக்குகளை அந்நாட்டு நீதித்துறை ரத்து செய்ய முடிவு செய்துள்ளது. கடந்த 2024ம் ஆண்டு நவம்பர் மாதம் அதானி குழும தலைவர் கவுதம் அதானி மீது அமெரிக்காவின் புரூக்ளின் கூட்டாட்சி வழக்கறிஞர்கள் அமைப்பு பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்தது. அதன்படி இந்தியாவில் சூரிய மின்சக்தி ஒப்பந்தங்களைப் பெற 265 மில்லியன் டாலர் லஞ்சம் கொடுத்ததாகவும், இது தொடர்பாக அமெரிக்க முதலீட்டாளர்களை தவறாக வழிநடத்தி நிதி திரட்டியதாகவும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.நாட்டு நடப்புகள்




இந்த குற்றச்சாட்டுகள் அனைத்தும் 'அடிப்படை ஆதாரமற்றவை' என்றும், அமெரிக்காவின் சட்ட வரம்பிற்கு அப்பாற்பட்டவை என்றும் அதானி குழுமம் திட்டவட்டமாக மறுத்து வந்தது. இந்த நிலையில், அமெரிக்க அதிபராக டிரம்ப் மீண்டும் பதவியேற்ற பிறகு இந்த சட்டப் போராட்டங்களில் தற்போது முக்கிய அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அதிபர் டிரம்ப்பின் தனிப்பட்ட வக்கீலான ராபர்ட் ஜே.கியுஃப்ரா ஜூனியர், இந்த வழக்கில் அதானி தரப்பிற்காக ஆஜராகி போதிய ஆதாரங்கள் இல்லை என 100 பக்க விளக்கங்களை அமெரிக்க நீதித்துறையிடம் அளித்தார்.
குறிப்பாக, அமெரிக்காவில் அதானி செய்யவிருந்த 10 பில்லியன் டாலர் முதலீடு மற்றும் அதன் மூலம் உருவாக உள்ள 15,000 வேலைவாய்ப்புகள் இந்த வழக்கால் முடங்கியிருப்பதை அவர் சுட்டிக்காட்டினார். இதன்பின்னர், கிரிமினல் மோசடி மற்றும் லஞ்ச வழக்குகளை வாபஸ் பெற அமெரிக்க நீதித்துறை தற்போது ஒப்புக்கொண்டுள்ளது. மேலும், எஸ்சிஇ சிவில் வழக்கில் எந்த தவறும் செய்யவில்லை என்பதை ஒப்புக்கொள்ளாமலேயே 15 மில்லியன் டாலர் அபராதம் செலுத்தவும், ஈரான் எரிவாயு கப்பல் போக்குவரத்து தொடர்பான மற்றொரு வழக்கில் அமெரிக்க கருவூலத்திற்கு 275 மில்லியன் டாலர் இழப்பீடு வழங்கவும் அதானி குழுமம் சம்மதித்துள்ளது



■ ஈரோடு மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி, பவளத்தாம்பாளையம், ஏ.எப்.டி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் வட்டாரப் போக்குவரத்துத் துறையின் சார்பில் நடைபெற்ற தனியார் பள்ளி வாகனங்களுக்கான வருடாந்திரக் கூட்டாய்வில், பள்ளி பேருந்துகளின் பாதுகாப்பு அம்சங்களை ஆய்வு மேற்கொண்டார். பள்ளி நிர்வாகத்தின் தொலைபேசி எண்கள், படிக்கட்டுகளின் உயரம், லாக்புக் பராமரிப்பு, ஜன்னல் கம்பிகளின் உறுதித்தன்மை, ஓட்டுநர் கேபின் மற்றும் கதவுடன் கூடிய இடதுபக்க வழி உள்ளிட்ட அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளும் முறையாக உள்ளனவா என்று ஆட்சியர் ஆய்வு செய்து, உரிய அறிவுறுத்தல்களை வழங்கினார்.

# வேளாண் விளைபொருட்கள் விலை மறுஆய்வு செய்ய வேண்டும்: விவசாயிகள் சங்கம் கோரிக்கை

சென்னை:மே.16-
தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.எஸ். மாசிலாமணி வெளியிட்ட அறிக்கை: மத்திய அரசு 202627 கரீப் பருவத்துக்கு 14 வேளாண் உற்பத்தி பயிர்களுக்கு அறிவித்துள்ள குறைந்தபட்ச ஆதரவு விலையானது வழக்கம் போல் விவசாயிகளை ஏமாற்றும் செயலாகவே உள்ளது.கடந்த 16 ஆண்டுகளாக போராடிவரும் விவசாயிகளின் அடிப்படை கோரிக்கையான, வேளாண் ஆணையத் தலைவர் எம்.எஸ்.சுவாமிநாதனின் பரிந்துரையான 'சி 2 + 50' (சாகுபடி செல



வுடன் 50 சதவீத லாபம்) என்ற முறையிலான விலை நிர்ணயத்தை இந்த முறையும் பாஜக அரசு அறிவிக்கவில்லை.மாறாக, 'சி 1 + 50' என்ற முறையை அறிவித்துவிட்டு, அதுதான் உண்மையான பரிந்துரை என்று விவசாயிகளை வஞ்சிப்பது கண்டிக்கத்தக்கது. கடந்த 200414 வரையிலான 10 ஆண்டுகளில் 4,590 லட்சம் டன்களாக இருந்த கொள்முதல், 2014 26 காலகட்டத்தில் 8,418 லட்சம் டன்களாக உயர்ந்துள்ளது.இச்சூழலில், அதற்கான உரிய விலை உயர்வை வழங்காமல், நெல் குவிண்டாலுக்கு வெறும் ரூ.72 மட்டுமே உயர்த்தப்பட்டுள்ளது.இதன் மூலம், சாதாரண ரக நெல் குவிண்டாலுக்கு ரூ.2,441 ஆகவும், சன்ன ரக நெல் ரூ.2,461 ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.வேளாண் ஆணையத்தின் பரிந்துரைப்படி, அனைத்து விளைபொருட்களுக்கும் 'சி 2 + 50' என்ற அடிப்படையில் விலையை மறுஆய்வு செய்து அறிவிக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.




# தெற்கு மண்டல அளவில் கோவில்பட்டி அஞ்சல் கோட்டம் அதிரடி சாதனை! விருதுகளை அள்ளிய கண்காணிப்பாளர் சுரேஷ் குமார்

கோவில்பட்டி மே,16-
கடந்த 2025 2026 ஆம் நிதியாண்டில் மிகச்சிறப்பான அஞ்சல் சேவைகளை வழங்கியதற்காக, தெற்கு மண்டல அஞ்சல் துறை சார்பில் கோவில்பட்டி அஞ்சல் கோட்டம் பல்வேறு விருதுகளை வென்று சாதனை படைத்துள்ளது. மதுரையில் நடைபெற்ற விழாவில், தெற்கு மண்டல அஞ்சல் துறை தலைவர் செய்யது ரஷீத் விருதுகளை வழங்கினார். மண்டல இயக்குனர் நீரஜ் மற்றும் உதவி இயக்குநர்கள் முன்னிலையில் இந்த விழா நடைபெற்றது.*சாதித்த திட்டங்கள்:*பெண் குழந்தைகளுக்கான செல்வ மகள் சேமிப்புத் திட்டம், பொன் மகன் கணக்கு, விரைவு அஞ்சல் , டிஜிட்டல் பரிவர்த்தனைகள், பொதுமக்களுக்கான ஆதார் சேவை மற்றும் சிறந்த வாடிக்கையாளர் சேவை எனப் பல பிரிவுகளில் கோவில்பட்டி கோட்டம் விருதுகளைத் தட்டிச் சென்றது.*மகிழ்ச்சியில் கண்காணிப்பாளர்:*ஒட்டுமொத்தச் சாதனைக்கான விருதினைப் பெற்றுக்கொண்ட கோவில்பட்டி அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர் சுரேஷ் குமார் கூறுகையில்: "கோவில்பட்டி கோட்டமானது தென்காசி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் தனது சேவையை வழங்கி வருகிறது. இந்த வெற்றிக்குக் காரணமான அஞ்சல் அலுவலர்கள் மற்றும் பொதுமக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுமக்கள் அஞ்சல் சேவை தொடர்பான சந்தேகங்கள் அல்லது புகார்களை 04632 221013 என்ற எண்ணிலோ அல்லது நேரிலோ என்னை அணுகி தெரிவிக்கலாம்," என்றார்.கோவில்பட்டி, சங்கரன்கோவில், தென்காசி ஆகிய 3 தலைமை அஞ்சலகங்கள் உள்ளிட்ட 340க்கும் மேற்பட்ட அஞ்சலகங்களை உள்ளடக்கிய இந்தக் கோட்டம் படைத்துள்ள இந்தச் சாதனை மக்களிடையே வரவேற்பைப் பெற்றுள்ளது.




SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000